# தமிழகத்துக்கான உரங்களை விரைந்து வழங்க வேண்டும்: பிரதமர் மோடிக்கு, முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்

சென்னை, செப்.17

**தமிழகத்துக்கான உரங்களை விரைந்து வழங்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

பிரதமர் மோடிக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

நாட்டின்முக்கியமானநெல்உற்பத்தி மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். மாநிலத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளித்து வருகிறது.

விவசாய உற்பத்தியை அதிகரிக்க ஊக்கமளிக்கும் வகையில் குறிப்பான பகுதிக்கு ஏற்ப திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அத்துடன், தேவையான வேளாண் இடுபொருட்கள் கிடைப்பதையும் சீராக கண்காணித்தும் வருகிறது.

பருவமழை முன்கூட்டியே தொடங்குவதை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் ஜூன் மாதம் முதல் காரிப் பருவத்தில் நெற்பயிர் முழுவீச்சில் பயிரிடப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, 5.66 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தில் பயிரிடப்பட்ட 5.13 லட்சம் ஹெக்டேர் பரப்பளவைவிட 0.53 லட்சம் ஹெக்டேர் அதிகமாகும். இதனால் மாநிலம் முழுவதும் நேரடி உரங்களுக்கு அதிக தேவை நிலவுகிறது.

மாநிலத்தில் பெய்துவரும் பரவலான மழை மற்றும் முக்கிய நீர்த்தேக்கங்களில் தண்ணீர் போதுமான அளவில் உள்ளதன் காரணமாக, விவசாய உற்பத்திக்கு தேவைப்படும் யூரியா, டி.ஏ.பி., எம்.ஓ.பி. மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களை உற்பத்தியாளர்களால் மத்திய அரசின் வழங்கல் திட்டத்தின்படி 2025 ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரை வழங்கிடவில்லை.

மொத்த ஒதுக்கீட்டில் சுமார் 57 சதவீதம் மட்டும் தான் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தற்போதைய காரிப் மற்றும் எதிர்வரும் ராபி பருவத்திற்கு, உர பற்றாக்குறையை தவிர்த்திடும் வகையில் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட வேண்டிய 27 ஆயிரத்து 823 டன் யூரியா, 15 ஆயிரத்து 831 டன் டி.ஏ.பி., 12 ஆயிரத்து 422 டன் எம்.ஓ.பி. மற்றும் 98 ஆயிரத்து 623 டன் என்.பி.கே. காம்ப்ளக்ஸ் உரங்களை விரைந்து வழங்க தேவையான அறிவுரைகளை ரசாயன மற்றும் உர அமைச்சகத்திற்கு வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் நேரில் சந்தித்தார். அப்போது அவருக்கு, முதலமைச்சர் வாழ்த்து தெரிவித்தார். அமைச்சர் சேகர்பாபு, ஆ.ராசா எம்.பி., முன்னாள் எம்.பி. ஆர்.எஸ்.பாரதி, கம்யூனிஸ்டு கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் முத்தரசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# 20 ஆண்டுகள் பணியாற்றி விருப்ப ஓய்வு பெறும் மத்திய அரசு ஊழியர்களுக்கு சலுகை

புதுடெல்லி, செப்.17

**20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பணியாற்றி விருப்ப ஓய்வு பெறும் மத்திய அரசு ஊழியர்கள் உறுதியளிக்கப்பட்ட ஊதியம் பெற தகுதி உடையவர்கள் என்று மத்திய அரசின் புதிய விதிமுறைகளில் அறிவிக்கப்பட்டுள்ளது.**

25 ஆண்டுகள் பணி முடித்த மத்திய அரசு ஊழியர்களுக்கு மட்டுமே ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தின்கீழ் (யு.பி.எஸ்.), முழுமையான உறுதியளிக்கப்பட்ட ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, தேசிய ஓய்வூதிய முறையின்கீழ் (என்.பி.எஸ்.), ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை தேர்வு செய்யும் மத்திய அரசு ஊழியர்களுக்கான சலுகைகள் தொடர்பான விஷயங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சமீபத்தில் 'மத்திய சிவில் சர்வீசஸ் (தேசிய ஓய்வூதிய முறையின்கீழ் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் அமல்படுத்துதல்) விதிகளை மத்திய அரசு கொண்டு வந்தது. அந்த விதிகளை, கடந்த 2ந்தேதி, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர்கள் நலத்துறை அரசிதழில் வெளியிட்டுள்ளது.

## புதிய விதிமுறைகளில் அறிவிப்பு

அந்த விதியின்படி, 20 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் பணியாற்றி விருப்ப ஓய்வு பெறும் மத்திய அரசு ஊழியர்கள், விகிதாச்சார அடிப்படையில் உறுதியளிக்கப்பட்ட ஊதியம் பெற தகுதி உடையவர்கள் என்று மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த விதிகள், 20 ஆண்டுகள் பணிக்கு பிறகு விருப்ப ஓய்வுபெற ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்ட சந்தாதாரர்களுக்கு வாய்ப்பு அளிக்கிறது.

பணியாற்றிய ஆண்டுகளை விகிதாச்சார அடிப்படையில் கணக்கிட்டு, உறுதியளிக்கப்பட்ட ஊதியம் சந்தாதாரருக்கு வழங்கப்படும். அவர் ஓய்வு பெறும் நாளில் இருந்து இத்தொகை வழங்கப்படும்.

தனிப்பட்ட தொகுப்பில் 60 சதவீதத்தை இறுதியாக திரும்பப்பெறுதல், ஒவ்வொரு 6 மாத பணிக்கும் அகவிலைப்படி, ஓய்வு பணிக்கொடை, விடுப்பை பணமாக்குதல், மத்திய அரசு ஊழியர்கள் குழு காப்பீட்டு திட்டம் போன்ற இதர சலுகைகளையும் ஓய்வு பெறும்போது பெறலாம்.

ஒருவேளை, விருப்ப ஓய்வு பெற்றுவிட்டு, உறுதியளிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கு முன்பே சந்தாதாரர் இறந்து விட்டால், சட்டப்பூர்வமாக திருமணம் செய்து கொண்ட அவரது கணவர்/மனைவிக்கு குடும்ப ஊதியம் வழங்கப்படும்.

இத்தகவல்களை மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# ஆசிய கண்டத்தில் சிறந்த சுற்றுலா கிராமமாக மூணாறு தேர்வு

மூணாறு, செப்.17–

கேரள மாநிலம் மூணாறில் இயற்கை எழில்மிகு பகுதிகளும், பச்சை பசேல் என்ற தேயிலை தோட்டங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இங்குள்ள நீரோடைகள், ஆறுகளை கண்டு ரசிப்பதற்காக ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். மேலும் சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்து மகிழ மாட்டுப்பட்டி, குண்டலை ஆகிய அணைகளும், எக்கோ பாயிண்ட் என்ற ஏரியும் உள்ளது. இங்கு பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களுக்கு பஞ்சமில்லை. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி மலரும் இந்த பகுதியில் காணப்படுகிறது. மேலும் இங்கு நிலவும் காலநிலை உள்நாட்டவர்களை மட்டுமின்றி, வெளிநாட்டவரையும் வெகுவாக கவர்ந்துள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் மூணாறு சிறந்து விளங்குகிறது. இந்த நிலையில் மத்திய சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டு துறை, ஆசிய கண்டத்தில் சிறந்த சுற்றுலா கிராமமாக மூணாறை தேர்வு செய்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதனை தற்போது கேரள அரசு வெளியிட்டுள்ளது.


**ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**
பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

## ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி **காலை 11:00 மணிக்கு** கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

**ஏலத் தேதி 26.09.2025 அன்று காலை 11.00 மணி**

| வ. எண். | கிளை | கணக்கு எண் | கணக்கு வைத்திருப்பவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 104142512337 | அரவிந்த்யாதவ் நம்மாழ்வார் |
| 2 | சென்னை | 104142511654 | கோகுல கே ஈ |
| 3 | சென்னை | 104142512542 | பரிமளா தாண்டவராயன் |
| 4 | சென்னை | 104142512541 | பரிமளா தாண்டவராயன் |
| 5 | சென்னை | 104142511826 | கார்த்திகா முருகேசன் |
| 6 | சென்னை | 104142511611 | சிவவிக்னேஷ்வர் |
| 7 | சென்னை | 104142512627 | கார்த்திக்ராஜா |
| 8 | சென்னை | 104142511441 | கமல் எம் |
| 9 | சென்னை | 104142512519 | வி ஜே பிரபாகர் |
| 10 | சென்னை | 104142511690 | கோபி சங்கர் |
| 11 | சென்னை | 104142512613 | சி எஸ் புஷ்கரன் |
| 12 | சென்னை | 104142512593 | மிதுன் எஸ் ஜி |
| 13 | சென்னை | 104142512607 | சுவாதி |
| 14 | சென்னை | 104142512622 | ஆனந்தன் வெற்றிவேல் |
| 15 | சென்னை | 104142512647 | சிம்ரன் |
| 16 | சென்னை | 104142512052 | டொமினிக் எஸ் டி |
| 17 | சென்னை | 104142512470 | டி என் அகமது |
| 18 | சென்னை | 104142512536 | சேவியர் பி ஹாரிங்டன் வி |
| 19 | சென்னை | 104142512505 | கிருஷ்ணகுமார் எஸ் |
| 20 | சென்னை | 104142512496 | கிருஷ்ணகுமார் எஸ் |
| 21 | சென்னை | 104142512517 | துரைமுருகன் |
| 22 | சென்னை | 104142512655 | மெஹ்தாப் நியாஸ் |
| 23 | சென்னை | 104142512508 | மெஹ்தாப் நியாஸ் |
| 24 | சென்னை | 104142512530 | எம் ரேவதி |
| 25 | சென்னை | 104142512532 | மனோகர் எஸ்.டி |
| 26 | சென்னை | 104142512563 | எம் ப்ரீத்தி |
| 27 | சென்னை | 104142512595 | ரகுபதி குருநாதன் |
| 28 | சென்னை | 104142512576 | கோர்னெலூ எம் |

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.**



**சென்னை உயர்நீதிமன்றம்**
**முதலேற்பு மனு எண். 453/2025**

இந்து சிறுபான்மை மற்றும் பாதுகாவலர் சட்டம் 1956 படி மைனர் செல்வன் P. சுப்புராம் வயது 16, பிறந்த தேதி 18.01.2009

S. பழனி (ஆண் / 48 வயது)
த/பெ. சுப்பையா,
எண்.6/70, அன்பு தெரு, காந்தி நகர்,
ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை – 600 032

– மனுதாரர்

இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்கண்ட மனுதாரரால் தொடரப்பட்டுள்ள முதலேற்பு மனு எண். 453/2025 மேற்படி உயர்நீதிமன்ற மாஸ்டர் முன்னிலையில் கடந்த 11.09.2025ஆம் தேதி மேற்கண்ட வழக்கானது பட்டியலிடப்பட்டு மேற்படி நீதிபதி அவர்கள் வரும் 17.10.2025ம் தேதி அறிவிப்பு தரச்சொல்லி உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட வழக்கு யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்கண்ட நீதிமன்றத்தில் வரும்17.10.2025அன்று காலை 10.30 மணிக்கு தாங்களோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் மேற்கண்ட வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிடும் என்பதை அறியவும்.

R. மாயாகிருஷ்ணன்,
G. மதன்ராஜ்,
மனுதாரருக்கான வழக்கறிஞர், 9841249639



## அசல் சொத்து ஆவணம் காணவில்லை

சென்னை–600018, ஆழ்வார்பேட்டை, செயின்ட் மாரிஸ் ரோடு பிரசாந்தம் அபார்ட்மெண்ட், எண்.141/2பி, என்ற முகவரியில் வசித்து வரும் சுமார் 76 வயதுள்ள திரு.பக்தவச்சலம் மனைவியாகிய B. சகுந்தலா (ஆதார் எண்.9150 7205 9118) ஆகிய நான் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில்,

22.11.2006 அன்று சார்பதிவு வட்டம், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி வட்டம் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல ஆவணம் எண்கள். 5413/2006 மற்றும் 5414/2006, நாள் 22.11.2006, ஆவணம் காணாமல் போய்விட்டது.

யாரேனும் கண்டு பிடித்தால் எனது தொலைபேசி எண்.8754573489 அல்லது மேற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
**B.சகுந்தலா**
கைபேசி எண். 8754573489



## பொது அறிவிப்பு
### அசல் நிலம் /சொத்து ஆவணம் காணவில்லை

கர்நாடகா மாநிலம், பெங்களூரு–560 064, பெங்களூரு வடக்கு, பெல்லாரி ரோடு, ஜாக்கூர் பிளான்டேசன் கிராமம், I.T.C. கார்டன் Enclave எண்.A/201 முகவரியில் வசித்து வரும் **திரு.பிரசன்ன சீனிவாசன்** அவருடைய மனைவி 46 வயதுடைய **திருமதி.ஸ்வேதாம்பரி சீனிவாசன் (Aadhaar No. 4081 1336 8243)** ஆகிய நான், இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்து கொள்வது யாதெனில் தியாகராயநகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல **அசல் ஆவண எண்.972/2004–ம் தேதி 31.03.2004** தொலைந்து விட்டது. யாரேனும் அதை கண்டுபிடித்தால் எனது **9886070517** கைபேசி எண்ணிற்கு அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி.ஸ்வேதாம்பரி சீனிவாசன்,**
**எண்.4/201, ITC கார்டன் Enclave,**
**ஜாக்கூர் பிளான்டேசன் கிராமம்,**
**பெல்லாரி ரோடு, பெங்களூரு வடக்கு,**
**பெங்களூரு, கர்நாடகா,**
Pin Code: 560 064.



## பொது அறிவிப்பு

என் கட்சிக்காரராகிய திரு.ஷிபு ஜஸ்டஸ் ஹாரிஸ் அவர்கள் அறிவிப்பது என்னவென்றால், மனை எண்.680, ஸ்ரீ கணபதி சின்டிகேட், பனங்கோட்டூர் கிராமத்தில், பழைய சர்வே எண். 125/1, பட்டா எண். 876, பட்டாபடி புதிய சர்வே எண். 125/87ல், அடங்கிய 2400 சதுரடி பரப்பளவு கொண்ட சொத்தை, என் கட்சிக்காரராகிய திரு.ஷிபு ஜஸ்டஸ் ஹாரிஸ் அவர்கள் திரு.சாமுவேல் ஹாரிஸ் ஜஸ்டஸ் @ S. H. ஜஸ்டஸ் அவர்களிடமிருந்து 17.05.2025 தேதியிட்ட, இணை 2, செங்கல்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண். 7921/2025 மூலம் அடையப் பெற்றார். மேற்படி சொத்து சம்மந்தபட்ட அசல் தாய் பத்திரமான, 24.10.1967 தேதியிட்ட, திரு. S. H. ஜஸ்டஸ் அவர்கள் ஸ்ரீ கணபதி சின்டிகேட்டின் பங்குதாரரும் மற்றும் பொது அதிகார முகவருமான திரு.S.விஜயகுமார் அவர்களிடமிருந்து செங்கல்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் கிரைய பத்திரம் ஆவண எண். 184/1968 தொலைந்து விட்டது. எல்லாவித முயற்சிகள் செய்தும், அசல் பத்திரத்தை கண்டு பிடிக்க முடியவில்லை. ஆகவே, மேற்படி சொத்தின் மீது உரிமை கோரிக்கை எவருக்கேனும் இருந்தாலோ, அல்லது காணாமல் போன பத்திரத்தை கைபற்றினாலோ இந்த அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் கீழ்க்கண்ட வழக்கறிஞரிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டியது அல்லது ஒப்படைக்க வேண்டியது. தவறினால், Title of the property சரியாக உள்ளது என்றும், வில்லங்கங்கள் எதுவும் இல்லை என்றும் கருதப்படும்.

.சுஜாதா வேணுகோபாலன்,
வழக்கறிஞர்,
எண் 16, 9வது தெரு, நங்கநல்லூர், சென்னை 600 061.
கைபேசி : 99406 50829


# தமிழ்நாட்டில் அடுத்த மாதம் சிறப்பு வாக்காளர் திருத்தப்பணி: கலெக்டர்களுக்கு, தலைமை தேர்தல் அதிகாரி உத்தரவு

சென்னை, செப்.17

இந்திய தேர்தல் கமிஷன், பீகாரில் 'எஸ்.ஐ.ஆர்.' எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியை மேற்கொண்டது.

அதன்மூலம் அந்த மாநிலத்தில் 2004ம் ஆண்டுக்கு பிறகு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தவர்கள் தங்களது குடியுரிமை ஆவணங்களை அதாவது பிறப்பு சான்றிதழ் உள்ளிட்ட 11 சான்றிதழ்களை வழங்க வேண்டும் என்று கூறியது.

மேலும் வாக்குச்சாவடி அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் பூத் ஏஜெண்டுகள் மற்றும் தன்னார்வலர்கள் வீடு, வீடாக சென்று வாக்காளர்களிடம் கணக்கெடுப்பு படிவத்தை கொடுத்து அதனை பூர்த்தி செய்து பெற்றுக்கொண்டனர்.

இந்த பணியின் மூலம் பீகாரில் இருந்த 7.24 கோடி வாக்காளர்களில் சுமார் 65 லட்சம் பேர் நீக்கப்பட்டனர். அதில் 22 லட்சம் பேர் இறந்து விட்டதாகவும், 35 லட்சம் பேர் இடம் மாறி சென்று விட்டதாகவும், 7 லட்சம் பேருக்கு 2 இடங்களில் வாக்குரிமை இருந்ததாகவும், ஒரு லட்சம் பேர் குறித்து எந்த தகவலும் இல்லை என்றும் தேர்தல் கமிஷன் கூறியது. ஆனால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு தரப்பினர் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்தனர்.

அதேபோல் எதிர்க்கட்சிகளும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி இது வாக்கு திருட்டு என்று கடுமையாக சாடினர்.

இதற்கிடையே பீகாரில் நடத்தப்பட்டது போல தமிழகம் உள்பட அனைத்து மாநிலங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியை மேற்கொள்ள தேர்தல் கமிஷன் முடிவு செய்தது. அதற்காக அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் கடந்த 10ந் தேதி டெல்லியில் ஆலோசனை நடத்தினார். இந்த சூழ்நிலையில் கடந்த 2 தினங்களுக்கு முன்பு சுப்ரீம் கோர்ட்டும் தேர்தல் கமிஷனின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கு தடை விதிக்க முடியாது. ஆனால் இந்த பணியை மேற்கொள்ளும்போது சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுகளை கடைபிடிக்க வேண்டும் என்று கூறியது.

இந்தநிலையில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், அனைத்து மாவட்ட கலெக்டர்களுடன் நேற்று காணொலி காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர், "தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கு தயார் ஆகுங்கள். அதற்காக வாக்குச்சாவடி அலுவலர்கள், வாக்குப்பதிவு அலுவலர் பணியிடங்கள் காலியாக இருந்தால் நிரப்ப வேண்டும்.

மேலும் வாக்குச்சாவடி அலுவலர் பணிக்கு ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் மட்டுமின்றி இனி அங்கன்வாடி பணியாளர்கள், கிராம உதவியாளர்கள், தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்ட பணியாளர்களை பயன்படுத்திக்கொள்ளலாம். மிக முக்கியமாக ஒரு வாக்குச்சாவடிக்கு 1,200 வாக்காளர்களுக்கு மேல் இருக்கக்கூடாது.

அப்படி இருந்தால் வாக்குச்சாவடி எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

தற்போதைய நிலையில் தமிழகத்தில் சுமார் 68 ஆயிரத்து 467 வாக்குச்சாவடிகள் இருக்கின்றன. தற்போது அதனை பிரிக்க இருப்பதால் இந்த எண்ணிக்கை 74 ஆயிரமாக அதிகரித்து விடும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேலும் அவர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி தமிழ்நாட்டில் அடுத்த மாதம் (அக்டோபர்) 1ந் தேதி முதல் தொடங்கும் என்றும் தெரிவித்தனர்.

# சென்னை ஐகோர்ட் நிரந்தர நீதிபதிகளாக செந்தில்குமார், அருள்முருகனை நியமிக்க கொலீஜியம் பரிந்துரை

சென்னை, செப்.17

சென்னை ஐகோர்ட்டில் கூடுதல் நீதிபதிகளாக இருக்கும் என். செந்தில்குமார், ஜி.அருள்முருகன் ஆகியோரை நிரந்தர நீதிபதிகளாக நியமிக்க சுப்ரீம் கோர்ட்டு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் பரிந்துரை செய்துள்ளது.

நீதிபதி என்.செந்தில்குமார் 1970 ம் ஆண்டு பிறந்தார். சென்னையில் உள்ள ரெயில்வே பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்து, சேலம் மத்திய சட்டக்கல்லூரியிலும் சட்டப்படிப்பை முடித்தார். 1994ம் ஆண்டு வக்கீலாக பதிவு செய்து மூத்த வக்கீல் ஆர்.சண்முகசுந்தரத்திடம் ஜூனியராக சேர்ந்தார். கடந்த 2023 ம் ஆண்டு அக்டோபர் 16ந்தேதி சென்னை ஐகோர்ட்டில் கூடுதல் நீதிபதியாக பதவி ஏற்றார்.

அதேபோல நீதிபதி ஜி.அருள் முருகன், 1976ம் ஆண்டு மே 27ந்தேதி தர்மபுரி மாவட்டம் அரூரில் பிறந்தார்.

சேலம் ஹோலிகிராஸ் பள்ளியில் பள்ளிப்படிப்பையும், சேலம் மத்திய சட்டக்கல்லூரியில் சட்டப்படிப்பையும் முடித்து 1999ம் ஆண்டு வக்கீலாக பதிவு செய்தார். மூத்த வக்கீல் கே.துரைசாமியிடம் ஜூனியராக 2002ம் ஆண்டு வரை பணியாற்றினார்.

கடந்த ஆண்டு ஐகோர்ட்டின் கூடுதல் நீதிபதியாக பதவி ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.


**Kothari** PETROCHEMICALS LTD
# கோத்தாரி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட்

CIN:L11101TN1989PLC017347
பதிவு அலுவலகம்: கோத்தாரி பில்டிங்ஸ்; எண். 115, மகாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
தொலைபேசி எண் : 044-35225528 / 35225529; மின்னஞ்சல் : secdept@hckgroup.com; இணையதளம் : www.kotharipetrochemicals.com

## பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

1. **100 நாட்கள் பிரச்சாரம் – "சாக்ஷம் நிவேஷக்" – KYC மற்றும் பிற தொடர்புடைய புதுப்பிப்புகள் மற்றும் பங்குதாரர்கள் தொடர்பு மூலம் செலுத்தப்படாத / கோரப்படாத ஈவுத்தொகையை முதலீட்டாளர்கள், கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்திற்கு (IEPFA) மாற்றப்படுவதை தடுக்க:**

ஜூலை 16, 2025 தேதியிட்ட முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் (IEPFA) கடிதத்தின்படி, கோத்தாரி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் ஜூலை 28, 2025 முதல் நவம்பர் 6, 2025 வரை 100 நாட்கள் பிரச்சாரமான "சாக்ஷம் நிவேஷக்"ஐத் தொடங்கியுள்ளது. இந்த பிரச்சாரத்தின்போது, தங்கள் ஈவுத்தொகையை கோராத அல்லது தங்கள் KYCஐ புதுப்பிக்காத அனைத்து பங்குதாரர்களும் அல்லது கோரப்படாத ஈவுத்தொகை மற்றும் பங்குகள் தொடர்பான ஏதேனும் சிக்கல்கள் இருப்பவர்கள், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA), அதாவது, M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்–னை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளலாம். மேலும் நிறுவனத்திற்கு secdept@hckgroup.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் அனுப்பலாம்.

இந்த பிரச்சாரம் பங்குதாரர்களை அணுகி, அவர்களின் KYC பதிவுகளைப் புதுப்பிக்கவும், அவர்களின் செலுத்தப்படாத / உரிமை கோரப்படாத ஈவுத்தொகையைப் பெறவும், அவர்களின் ஈவுத்தொகை மற்றும் பங்குகள் IEPF–க்கு மாற்றப்படுவதை தடுக்கும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது.

2. **காகித வடிவிலான பங்குகளுக்கான பரிமாற்ற கோரிக்கைகளை மீண்டும் சமர்ப்பிப்பதற்கான சிறப்பு சாளர வாய்ப்பு**

ஜூலை 2, 2025 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண். SEBI/HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97ன்படி பங்குகளை மாற்றுவதற்கான கோரிக்கைகளை சமர்ப்பிக்க காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்களுக்கு ஒருமுறை சிறப்பு சாளரத்தை வழங்குவதில் நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது. இந்த வசதி, ஏப்ரல் 01, 2019க்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் / செயல்முறை / அல்லது வேறுவிதமான குறைபாடு காரணமாக நிராகரிக்கப்பட்ட / திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட / ஏற்கப்படாத பங்கு மாற்றுப் பத்திரங்களுக்கு பொருந்தும். மீண்டும் சமர்ப்பிப்பதற்கான வசதி ஜனவரி 6, 2026 வரை கிடைக்கும்.

முதலீட்டாளர்கள், முன்னர் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்த பிறகு, அத்தகைய பங்கு மாற்று கோரிக்கைகளை, நிறுவனப் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்களான M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டில் ஜனவரி 6, 2026க்குள் பின்வரும் முகவரியில் மீண்டும் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்,
யூனிட் : கோத்தாரி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட்,
சுப்ரமணியன் பில்டிங்ஸ், 5வது மாடி, எண்.1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை – 600 002,
தொலைபேசி எண் 044–40020700 / 40020784 & 40020723, மின்னஞ்சல் : investor@cameoindia.com
ஆன்லைன் முதலீட்டாளர் போர்டல் : https://wisdom.cameoindia.com

**கோத்தாரி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட்டுக்காக**
**K. பிரியா**
கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 17.09.2025



**மாண்புமிகு VIII உதவி சிட்டி சிவில் நீதிமன்றம் முன்பாக**
**சென்னை**
O.S. No. 531/2023

M/s. ஐசிஐசிஐ வங்கி லிமிடெட்,
சார்பாக அதன் மேலாளர்
எண்.1, செனடாப் சாலை, ரத்னா நகர்,
தேனாம்பேட்டை, சென்னை – 600 018

...மனுதாரர்

எதிர்

A. இஸ்மாயில் மைதீன், S/o. ஆசான் முகமது,
கதவு எண்.7/3, சரோஜினி பாய் தெரு,
மதியழகன் நகர், சாலிகிராமம், பிரசாத் லேப்
அருகில், சென்னை – 93. ...பிரதிவாதி

ஐயா,
மேற்கண்ட வழக்கில், சென்னையில் உள்ள மாண்புமிகு VIII கூடுதல் சிட்டி சிவில் நீதிமன்றம் உங்களுக்கு பத்திரிகை வெளியீடு மூலம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டு, 19.09.2025 அன்று நீங்கள் நேரில் ஆஜராகுமாறு கூறியுள்ளது. அன்றைய தினம் நேரில் அல்லது உங்கள் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி, உங்கள் ஆட்சேபனை ஏதேனும் இருந்தால் தாக்கல் செய்ய வசதியாக இருங்கள். இல்லையெனில், நீங்கள் இல்லாத நேரத்தில் மனு அதன் தகுதியின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

நன்றி

**S.C. விஸ்வந்த்**
**மனுதாரர் ஆலோசகர்**



**சென்னை உயர்நீதிமன்றம்**
**( உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை )**
O.P. No.370 of 2025

இந்திய வாரிசுரிமைச் சட்டம் XXXIX OF 1925 தொடர்பான மனுவில் கடந்த 04.06.2020 அன்று இறந்த பி வித்யாசாகர் கிடம்பி அவர்களின் பங்கு பத்திரங்களில் வாரிசு உரிமை கோரும் மனு.

1 ரங்கராஜன் கிடம்பி, த/பெ. வித்யாசாகர் கிடம்பி,
1073, செருஸ், 134, ஆற்காடு சாலை, சாலிகிராமம்,
சென்னை 600 093.
2. எஸ். ராதிகா, க/பெ. சத்யநாராயண பாபு,
42, 32/1, சாரங்கபாணி தெரு,
தியாகராய நகர், சென்னை 600 017.
3. அனுராதா ஷியாம்சுந்தர், க/பெ. ஷியாம்சுந்தர்,
14, ரென்ஃபீல்ட் டிரைவ், பிரின்ஸ்டன்,
நியூ ஜெர்சி 08540, அமெரிக்கா.
தற்போது வசிப்பிடம்,
எண். 42, 32/1, சாரங்கபாணி தெரு,
தியாகராய நகர், சென்னை 600 017.

...மனுதாரர்கள்

சென்னை 600 093, சாலிகிராமம், அருணாச்சலம் சாலை, எண். 16/1, ஹொரைசான் ரெசிடென்சஸ், கதவு எண் 101ல் வசித்து வந்து 04.06.2020 அன்று இறந்துபோன பி.வித்யாசாகர் கிடம்பி அவர்களின் பங்கு பத்திரங்களில் ஏதேனும் பாத்தியதை கோருகின்ற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால் நீதிமன்றம் சான்றிதழ் வழங்குவதற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்றம் மாஸ்டர் கோர்ட்டில் வருகின்ற 06.10.2025 அன்று காலை 10:30 மணிக்கு நீதிமன்றத்தில் மேற்படி மனு விசாரணையின் போது நடவடிக்கைகளைப் பார்த்து தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள் .

025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது

ஏ.எம். வெங்கடகிருஷ்ணன்,
டி. பாண்டியன்,
எஸ். தீபக்,
வி. குரு ராஜ மாருதி குமார்
வழக்கறிஞர்கள்
எண் 164 கூடுதல் சட்ட அறைகள்,
உயர்நீதிமன்றம், சென்னை 600104.
செல்.9884028675

திரு உப்பலபு எஸ் . கண்ணன்
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு I
மெட்ராஸ் உயர்நீதிமன்றம்
சென்னை 600104.



CYBERWAVE
# சைபர்வேவ் இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்
பதிவு அலுவலகம்: ''பட்டாட் டவர்'', எண். 18, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை–600 002.

## பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

கம்பெனியின் உறுப்பினர்களுக்கு அவர்களின் பதிவு பெற்ற முகவரிக்கு கூரியர் மூலம் அனுப்பப்பட்டுள்ள வருடாந்திர அறிக்கை 2025 மற்றும் 22 ஆகஸ்ட், 2025 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண அலுவல்களை செயல்படுத்த கம்பெனி உறுப்பினர்களின் இருபத்து ஒன்பதாவது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) செவ்வாய்கிழமை, 30 செப்டம்பர், 2025 அன்று காலை 11.00 மணிக்கு ''பட்டாட் டவர்ஸ்'', எண். 18, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை–600 014ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை 2025 ஆகியவை பங்குதாரர்களுக்கு கூரியர் மூலம் அனுப்பும் பணி 31.08.2025 அன்று முடிவடைந்துள்ளது.

மேற்சொன்ன வருடாந்திர பொதுக்கூட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ள அலுவல் இனங்கள் தொடர்பான ஆவணங்களை வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நாள் வரை எந்த ஒரு வேலை நாளிலும் அலுவல் நேரத்தில் கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் பார்வையிடலாம். கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108, அவ்வப்போது திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20ன்படி, இருபத்து ஒன்பதாவது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான வசதியை கம்பெனி அளித்துள்ளது மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (சிடிஎஸ்எல்) அளிக்கும் மின்னணு வாக்குப்பதிவு சேவைகள் மூலமாக அலுவல் செயல்படுத்தப்படும்.

மின்னணு வாக்குப்பதிவு 27 செப்டம்பர், 2025 (காலை 9.00 மணி) அன்று தொடங்கி 29 செப்டம்பர், 2025 (மாலை 5.00 மணி) முடிவடைகிறது. இந்த காலத்தில், கட் ஆப் தேதியான 23.09.2025 அன்று காகித வடிவில் அல்லது பத்திரமில்லாத வகையில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். அதன்பின்னர் வாக்குப்பதிவை சிடிஎஸ்எல் செயலிழக்க செய்துவிடும். பங்குதாரர் ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்துவிட்டால் அதனை பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார். 23.09.2025 அன்று கம்பெனியின் செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனத்தில் அவர்களின் பங்குகள் விகிதத்தில் பங்குதாரர்களின் ஓட்டுரிமை இருக்கும். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு முறையில் அல்லது வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதி உள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்குகளை ஏற்கனவே பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க உரிமை உள்ளது. வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்கினை பதிவு செய்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ஆஜராகலாம் ஆனால் மறுபடியும் வாக்களிக்க உரிமை கிடையாது.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு பங்குகளை பெற்று கம்பெனியின் உறுப்பினர் ஆனவர் மற்றும் கட் ஆப் தேதியன்று பங்குகளை வைத்துள்ளவர் helpdesk@cdslindia.comக்கு கோரிக்கை அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக ஒரு நபர் ஏற்கனவே சிடிஎஸ்எல்–ல் பதிவு செய்திருந்தால் தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பு எண் 8–ல் மின்னணு வாக்குப்பதிவிற்கான நடைமுறை மற்றும் வழிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளது. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் குறை/சந்தேகம் இருப்பின் அது குறித்து பதிவாளர்கள், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சென்னை, தொலைபேசி எண். 044-28461173, e-mail: investor@cameoindia.com அல்லது கம்பெனி செயலாளர், தொலைபேசி எண்: 044-28511211, e-mail: acs@arunexcello.com or CDSL at Tel.No.022-22723333, e-mail: helpdesk@cdslindia.com–க்கு அனுப்பலாம்.

மின்னணு வாக்குப்பதிவு நேர்மையாகவும், வெளிப்படையான முறையிலும் நடைபெற திரு. ஆர். தமிழ்வாணன், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் (உறுப்பினர் எண். 3721) அவர்கள் ஆராய்வாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நாள் அன்றோ அல்லது அதற்கு பின்னரோ முடிவுகள் அறிவிக்கப்படும். முடிவுகள் மற்றும் ஆராய்வாளரின் அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளத்தில் வைக்கப்படும்.

மேற்சொன்ன வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91ன்படி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் 24 செப்டம்பர் 2025 முதல் 30 செப்டம்பர் 2025 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

குறிப்பு: கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க தகுதி உள்ள ஒரு உறுப்பினர் தனக்கு பதிலாக பதிலியை அனுப்பி வாக்களிக்க வைக்கலாம். பதிலி கம்பெனியின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை. பதிலி படிவங்களை முறையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு கூட்டம் நடைபெறுவதற்கு 48 மணி நேரம் முன்னதாக கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

**குழுவின் ஆணைப்படி**
**சைபர்வேவ் இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டுக்காக**
**பி. சுரேஷ்**
**இயக்குனர்**

**இடம் : சென்னை**
**தேதி : 06 செப்டம்பர், 2025**